# DEPOSITION OF WITNESS
( In the Court of the Principal District Munsif, Sankarankovil )

## O.S. No. 20/2016

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | : காளிமுத்து |
| Father's Name | : -- |
| Village | : -- |
| Taluk | : -- |
| Caste | : -- |
| Calling | : கூலி |
| Religion | : இந்து |
| Age | : -- |
| Date | : 03.06.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 03rd June 2019.

**முதல் விசாரணை :**

நான் வழக்கின் வாதி. நான் இன்று இந்த வழக்கில் சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் வாதியாக இருந்து இதே நீதிமன்றத்தில் கணபதி என்பவர் மீது தாக்கல் செய்த அ.வ.எண். 191/2014 என்ற வழக்கில் ஏற்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1. மேற்படி

வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2. வழக்கு சொத்திற்குரிய கணினி பட்டா தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3. என் பெயரில் ஏற்பட்ட மற்றொரு கணினி பட்டா தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4. வழக்கு சொத்திற்கு நான் செலுத்திய நிலவரி ரசீது தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5.

**முதல் விசாரணை தொடர்ச்சி வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**